தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 24, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024

1993, ஏப்ரல் 6, செவ்வாய்க்கிழமை

———

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்

ஏதப்பாடு அஞ்சு பவர்''.

தமக்கு இழிவு என்கின்ற குற்றம் வந்து சேரக்கூடாது என்று அஞ்சுபவர்கள் நன்மை பயக்கும் என்று தெளிவாகத் தெரியாத தொழிலைச் செய்யமாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள். வினா எண் 241, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

241—

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு தொழிற்சாலைகளில் பயிற்சி.

*10911—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குத் தொழிற்சாலைகளில் தொழிற் கல்விக்காகப் பயிற்சி அளிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே நடைமுறைப்படுத்தப் படுமா?

[1993 ஏப்ரல் 6

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் கேள்விக்கு இடமில்லை என்று கூறியிருக்கிறார்கள். அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் தொழிற் பயிற்சிக் கூடங்களுக்கு சென்று தனியாக படித்து, கல்வி வீணாவதை விட பள்ளிகளில் படிக்கின்றபோது ஒரு நேரம் தொழிற்சாலைகளில் பல்வேறு தொழில் பயிற்சியை கொடுக்கின்ற விதத்தில் மீண்டும் அரசு பரிசீலித்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது நடைமுறை சாத்தியமில்லாத காரணத்தினாலேதான் நாம் தொழிற்சாலையில், படிக்கின்றபோதே அந்த அனுபவத்தைத் தருவதற்கான ஒரு முயற்சியிலே ஈடுபடவில்லை. அதை ஆரம்பத்திலே அதுமாதிரி செய்ய நாம் விரும்பி அப்படியான சில ஏற்பாடுகளை செய்து அது வெற்றி பெறவில்லை. ஆனால் இப்பொழுது தொழில் பாடப் படிப்பு முடித்து தேர்ச்சிப் பெற்ற மாணவர்களுக்கு அவர்கள் சுயமாக தொழில் புரியவோ அல்லது தொழிற்சாலைகளில் பணி புரியவோ ஏதுவாக முக்கியமான 20 தொழில் பாடங்களுக்கு போர்ட் ஆப் அப்ரன்டிசிங் பயிற்சிமூலம் ஒரு வருடக் காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்படி பயிற்சிக் காலங்களில் மாதம் 380 ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொழிற் பயிற்சிக் கூடத்தில் பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு பயிற்சி அளிப்பதாக கூறினார்கள். இப்பொழுது அவர்கள் பள்ளியில் படிக்கின்றபோது கடைசி இறுதியாண்டு படித்து, பிளஸ் 2 செல்கின்றவரை படிக்கின்ற மாணவர்கள் தொழில் பயிற்சிக்கு செல்கின்றபோது இப்பொழுது வளர்ந்துவரும் நாட்டில் விஞ்ஞான ரீதியில் எலெக்ட்ரானிக்ஸ், எலெக்டிரிக்கல்ஸ் போன்ற பயிற்சிகளையாவது கொடுப்பதற்கு இந்தத் துறையைச் சார்ந்த தொழிற்சாலைகளில் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழில் பயிற்சி தொழில் பாடங்களைப் பொறுத்தமட்டில் நாம் மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று விரும்பியிருக்கிறோம். அதற்காக ஒரு குழுவை அமைக்க இருக்கிறோம். அந்தக் குழு விடம் இந்த யோசனையைச் சொல்லி, இதைப் பரிசீலிக்க சொல்கின்றோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 242, திருமதி கவிநிலவு தர்மராஜ். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

242—

முகாசி அனுமன் பள்ளியில் நூலகம் அமைத்தல்.

* 11758—திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா----

மொடக்குறிச்சி தொகுதி, முகாசி அனுமன் பள்ளியில் நூலகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மொடக்குறிச்சி தொகுதி முகாசி அனுமன் பள்ளிக்கிராமத்தில் மொத்த மக்கள் தொகை 3857 ஆக இருப்பதால் தற்போதுள்ள விதிமுறைகளின்படி தற்போது இங்கு கிளை நூலகம் திறக்க வாய்ப்பில்லை. இருப்பினும் பகுதி நேர நூலகங்கள் திறப்பதற்கான நிபந்தனைகளை ஊர்ப்பொது மக்கள் அல்லது உள்ளாட்சி நிறுவனத்தார் நிறைவேற்றி தரும் பட்சத்தில் இங்கு ஒரு பகுதி நேர நூலகம் திறக்க வாய்ப்பு உள்ளது.

திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு'' என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் மொடக்குறிச்சி தொகுதியைப் பொறுத்தவரையில் பாமர மக்களும், பள்ளி சென்று படிக்க இயலாதவர்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கிற காரணத்தினால்